**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், உத்திரமேரூர்.**

**முன்னிலை:** Ms. R.கிருத்தியா, B.A.,LL.B.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 12 / 2025**

**CNR No. TNKP10000858-2024**

1. V. அமராவதி
2. V. திவ்யா
3. V. பவ்யா
4. V. சத்யா

.... வாதிகள்

**/எதிர்/**

1. திரு.வட்டாட்சியர், உத்திரமேரூர் வட்டம்
2. உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம்.

.... பிரதிவாதிகள்

-----

இவ்வழக்கு 18.02.2025–ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு 13.03.2026–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B.S. ரமேஷ் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு. A.K.ரமேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

இறந்து போன வேல்முருகன் என்பவருக்கு வாதிகள் மட்டுமே முதல்நிலை வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கக்கோரியும், 1ம் பிரதிவாதி வாரிசு சான்று வழங்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:**

1ம் வாதியும், இறந்து போன வேல்முருகன் என்பவரும் கணவன் மனைவி ஆவர். 2 முதல் 4 வாதிகள் மேற்படி 1ம் வாதி மற்றும் வேல்முருகன் அவர்களின் பிள்ளைகள் ஆவர். 1ம் வாதியின் கணவர் முதலில் தனலட்சுமி என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தனலட்சுமி தனது கணவருடன் வாழ முடியாது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரிந்து சென்றுவிட்டார். அதன்பிறகு வேல்முருகன் 1ம் வாதியை திருமணம் செய்துக் கொண்டார். மேற்படி திருமண பந்தத்தின் மூலம் 2 முதல் 4 வாதிகள் பிறந்தனர். முதல் மனைவி தனலட்சுமி வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார். மேற்படி வேல்முருகன் உடல்நலக்குறைவு காரணமாக 07.12.1993 ம் தேதி காலமாகி விட்டார். வாதிகளின் அறியாமை காரணமாக வாரிசு சான்றிதழ் பெறவில்லை. தற்போது இறந்து போன வேல்முருகன் என்பவரின் வாரிசு சான்றிதழ் கோரி 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனு செய்த போது மனு நிராகரிக்கப்பட்டது. எனவே வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :**

வாதிகளின் வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல, 1ம் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளை தவிர மிகுதி சங்கதிகள் அனைத்தையும் நிரூபிக்கும் பொறுப்பு வாதிகளையே சாரும். வேல்முருகன் முதல் மனைவி தனலட்சுமி உயிருடன் இருக்கும் போதே இரண்டாவதாக அமராவதி என்பவரை திருமணம் செய்து கொண்டார். எனவே வேல்முருகன் என்பவருக்கு மேற்படி தனலட்சுமி, 2 முதல் 4 வாதிகள் மட்டுமே முதல்நிலை வாரிசுகள் ஆவர். 1ம் வாதி வேல்முருகனுக்கு வாரிசு இல்லை. இவ்வழக்கில் தனலட்சுமி என்பவரை தரப்பினராக சேர்க்கவில்லை. அவசியதரப்பினரை சேர்க்காத காரணத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இரு தரப்பு வாதுரைகளையும் பரிசீலித்து 11-09-2025-ம் தேதியில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1 | Whether the plaintiffs are entitled for declaration as prayed for ? |
| 2 | Whether the plaintiffs are entitled for Mandatory injunction as prayed for? |
| 3 | To what other relief, plaintiffs entitled ? |

5) வாதிகள் தரப்பில் 3ம் வாதி பவ்யா வா.சா.1 ஆகவும், வேல்முருகனின் முதல் மனைவி தனலட்சுமி வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டதன் காரணமாக சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இருதரப்பு வழக்கறிஞர்களின் வாய்மொழி விவாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) **<u>வழக்கெழுவினா 1 க்கான தீர்வு:</u>**

2 முதல் 4 வாதிகளின் தாயார் 1ம் வாதி ஆவார். 1ம் வாதியின் கணவர் இறந்து போன வேல்முருகன் ஆவார். மேற்படி வேல்முருகன் முதலில் தனலட்சுமி என்பவரை திருமணம் செய்து கொண்டுள்ளார். அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மேற்படி தனலட்சுமி வேல்முருகனை விட்டு பிரிந்து சென்றுள்ளார் என்பது வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது. அதன்பிறகு வேல்முருகன் 1ம் வாதியை திருமணம் செய்துக் கொண்டுள்ளார். மேற்படி திருமண பந்தத்தின் மூலம் 2 முதல் 4 வாதிகள் பிறந்துள்ளனர். மேற்படி வேல்முருகன் உடல்நலக்குறைவு காரணமாக 07.12.1993 ம் தேதி காலமாகியுள்ளார். அவருடைய இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறந்து போன வேல்முருகன் என்பவரின் வாரிசு சான்றிதழ் கோரி 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனு செய்த போது மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி மேலெழுத்து வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வாதிகள் தரப்பில் வேல்முருகனின் முதல் மனைவி தனலட்சுமி என்பவரை இந்நீதிமன்றத்தில் வா.சா.2 ஆக விசாரணை செய்து தனலட்சுமி வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டு வசித்து வருவதையும், வாதிகளுக்கு வாரிசு சான்று வழங்குவதில் எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் தெளிவுப்படுத்தியுள்ளனர். வாதிகள் மட்டுமே இறந்து போன

வேல்முருகன் என்பவருக்கு முதல்நிலை வாரிசுகள் என்பதையும் வாதி தரப்பு சாட்சியங்களின் மூலமும், வாதிகள் தரப்பு ஆவணங்களின் மூலமும் நிரூபித்துள்ளனர். எனவே வாதிகள் மட்டுமே இறந்து போன வேல்முருகன் என்பவரின் முதல்நிலை வாரிசுகள் என்ற பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. **அவ்வாறே வழக்கெழுவினா 1 க்கு தீர்வு காணப்படுகிறது.**

**7) வழக்கெழுவினா 2 க்கான தீர்வு**

முந்தைய எழுவினாவில் நீதிமன்றத்தால் வாதிகள் கோரிய படி இறந்து போன வேல்முருகன் என்பவருக்கு வாதிகள் முதல்நிலை வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே 1 ம் பிரதிவாதி வாரிசு சான்று வழங்க வேண்டும் என்று செயலுறுத்து கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. **அவ்வாறே வழக்கெழுவினா 2 க்கு தீர்வு காணப்படுகிறது.**

**8) வழக்கெழுவினா 3 க்கான தீர்வு**

வாதிகளுக்கு வழங்க வேண்டிய வேறு பரிகாரம் எதுவும் இல்லை. வழக்கின் செலவுத் தொகை இல்லை. **அவ்வாறே வழக்கெழுவினா 3 க்கு தீர்வு காணப்படுகிறது.**

**8) இறுதியாக**

| | |
|---|---|
| 1 | வழக்கு அனுமதிக்கப்படுகிறது.<br>வாதிகள் கோரியபடி இறந்துபோன வேல்முருகன் என்பவருக்கு வாதிகள் மட்டுமே முதல்நிலை வாரிசுகள் என்று |

| | |
|---|---|
| | விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 2 | 1 ம் பிரதிவாதி இறந்துபோன வேல்முருகன் என்பவருக்கு வாதிகள் முதல்நிலை வாரிசுகள் என்று வாரிசு சான்று வழங்க வேண்டும் என்று செயலுறுத்து கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 3 | வழக்கின் செலவுத்தொகை இல்லை. |

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 27.03.2026-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

R KRITYA

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by R KRITYA
Location: UTHIRAMERUR
Date: 2026.03.27 15:18:00 +0530

மாவட்ட உரிமையியல மறறும் குற்றவியல் நடுவர்,
உத்திரமேரூர்.

**வாதிகள் தரப்பு சாட்சி**

1. வா.சா.1 பவ்யா (3 ம் வாதி)
2. வா.சா.2 தனலட்சுமி

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | வேல்முருகன் இறப்பு சான்றிதழ் | அசல் |
| 2 | வா.சா.ஆ.2 | தனலட்சுமி எழுதிக் கொடுத்த கடிதம் | அசல் |
| 3 | வா.சா.ஆ.3 | தனலட்சுமி எழுதிக் கொடுத்த ஆணையுறுதி பத்திரம் | அசல் |
| 4 | வா.சா.ஆ.4 | 1 ம் வாதியின் திருமண அழைப்பிதழ் | நகல் |
| 5 | வா.சா.ஆ.5 | 1 ம் வாதியின் ஆதார் அட்டை | நகல் |
| 6 | வா.சா.ஆ.6 | 2 ம் வாதியின் ஆதார் அட்டை | நகல் |
| 7 | வா.சா.ஆ.7 | 3 ம் வாதியின் ஆதார் அட்டை | நகல் |
| 8 | வா.சா.ஆ.8 | 4 ம் வாதியின் ஆதார் அட்டை | நகல் |

| | | | |
|---|---|---|---|
| 9 | வா.சா.ஆ.9 | 2 ம் வாதியின் மாற்றுச்சான்றிதழ் | நகல் |
| 10 | வா.சா.ஆ.10 | 3 ம் வாதியின் மாற்றுச்சான்றிதழ் | நகல் |
| 11 | வா.சா.ஆ.11 | 4 ம் வாதியின் மாற்றுச்சான்றிதழ் | நகல் |
| 12 | வா.சா.ஆ.12 | வட்டாட்சியர் வழங்கிய மேலெழுத்து | நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.**

R KRITYA

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by R KRITYA
Location: UTHIRAMERUR
Date: 2026.03.27 15:18:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
உத்திரமேரூர்.